[20th January 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மற்ற பல குற்றச் சட்டங்களைப் போலவே இதுவும் ஒரு குற்றச் சட்டம். மற்ற சட்டங்களை அமுல் நடத்துவது போலவே இந்தச் சட்டத்தையும் போலீசார்கள் நிறைவேற்றி வருகிறார்கள். இதற்காகத் தனி இலாகா என்று ஏற்படுத்துவது அவசியம் இல்லை.

திரு. கே. பொன்னையன் : மதுவிலக்கு அட்வைசரி கமிட்டி கூட்டமானது மூன்று மாதத்திற்கு ஒரு தடவை ஜில்லா மட்டத்தில் நடந்து கொண்டிருந்தது. இப்போது இல்லை. அதேமாதிரியான நிலையை மீண்டும் ஏற்படுத்த முடியுமா? மற்ற தாலூக்காக்களில் நடைபெறும் செய்தியை அப்போதுதான் தெரிந்து கொள்ள வசதியாக இருக்கும்.

கனம் திரு. பூ. கக்கன் : டெவலெப்மெண்டு கவுன்சில் இதுபற்றியெல்லாம் நல்லமுறையில் பரிசிலனை செய்து வருவதால் இந்த கமிட்டிக்கு அவசியம் இல்லை என்று அரசாங்கத்தார் எடுத்து விட்டார்கள். இப்போது அந்த அந்த தாலூக்கா மட்டத்தில் அமைந்திருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

Sharing of Cauvery waters

*23 Q.—Sri M. KALYANASUNDARAM : } Will the Hon.
Sri K. A. MATHIALAGAN : } the Minister for Food be pleased to state :

(a) whether any meeting took place as proposed at the metting of the Southern Zonal Council held at Hyderabad on 28—5—1963, between the Chief Minister of Madras and the Chief Minister of Mysore to discuss the issues relating to the sharing of the Cauvery waters, and the Hogenakkal Power Project; and

(b) the present stage of the negotiations ?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) No.

(b) Does not arise.

Shading of waters of west-flowing rivers.

*24 Q.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state with reference to the Question No. 224 answered on 11th Marh 1964 the steps taken regarding the schemes of sharing water from the west-flowing rivers ?

The Hon. Sri R. VENKATARAMAN : The reply of the Government of Kerala is still awaited.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இரண்டு ராஜ்ய முதல் அமைச்சர்களும் சந்தித்துப் பேசுவதாக இருந்ததே. சந்தித்துப் பேசப்பட்டதா ? அப்படியானால் அதன் விவரம் என்ன ?

20th January 1965]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முதல் அமைச்சர்கள் சந்தித்துப் பேசவில்லை. இது சம்பந்தமான கடிதப் போக்கு வரத்துக்கள் யூனியன் மினிஸ்ட்ரி அளவில் அனுப்பப்பட்டு இருக்கிறது. அவர்கள் அதைப் பரிசீலனை செய்து மேற்கொண்டு உதவி செய்ய முடியுமானல் செய்வார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கேரள ராஜ்யத்திற்கும், நம் ராஜ்யத்திற்கும் பொதுவான எத்தனை திட்டங்கள் ஆலோசனையில் இருக்கிறது என்பதை அறியலாமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்மைப் பொறுத்த அளவில் எல்லா ஆறுகளும், நதிகள் அவைகளுடைய பிரிவுகள் எல்லாவற்றையும் பார்த்து 6 திட்டங்களில் பங்கு கொள்ள முடியும் என்று நம் என்ஜினியர்கள் சொல்லியிருக்கிருர்கள். அதை அவர்களுக்கு எழுதி இருக்கிறேம்.

கிராம மருத்துவர்கள் நியமனம்

*25 **கேள்வி.—திரு து. ப. அழகமுத்து :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிராமங்களில் உள்ள மருத்துவ மனைகளுக்கு BI and ‘C’ கிரேடு மருத்துவர்களை வேலைக்கு அமர்த்த பஞ்சாயத்து யூனியன்கள் சர்க்காரிடம் அனுமதி கோரியுள்ளனரா ?

(இ) சர்க்கார் அனுமதி அளித்த பிறகு எவ்வளவு காலத்தில் அவர்கள் அங்கீகரிக்கப்படுகிருர்கள் ?

(உ) அங்கீகரிக்கப்பட்டவர்களின் பதவிக்காலம் ஆண்டு தோறும் ரின்யூவல் செய்யப்படுகிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் B I and C வகுப்பு மருத்துவர்களை கிராம மருத்துவர்களாக நியமிப்பதற்கான திட்டங்களை மருத்துவத் துறை நெறியாளருக்கு அனுப்புகிருர்கள். அந்தத் திட்டங்களை மருத்துவத் துறை நெறியாளர்கள் தற்காலிகமாய் ஓராண்டு கால அளவிற்கு அல்லது தகுதிபெற்ற ‘A’ வகுப்பு மருத்துவர்கள் கிடைக்கும் வரை இவற்றில் எது முந்தியதோ அந்தக் கால அளவிற்கு அனுமதிக்கிருர்.

(உ) ‘A’ வகுப்பு மருத்துவர்கள் கிடைக்கவில்லையென்ருல் C வகுப்பு மருத்துவர்கள் தொடர்ந்து கிராம மருத்துவர்களாகப் பணியாற்ற அனுமதி வழங்கப்படும்.

திரு. து. ப. அழகமுத்து : பதவிக்காலம் முடிந்தவுடனே மேற்கொண்டும் பதவியில் நீடித்து இருப்பதற்கு ரினியூவலுக்கு மருத்துவதுறையினருக்கு எழுதினல் உடனடியாக அனுமதி வழங்கப்படுவதில்லை. மிக்க காலதாமதமாகிறது. அப்படியின்றி உடனடியாக அனுமதி வழங்கப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கே அந்தப் பவர் கொடுக்கப்பட்டு இருக்கிறது.